**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 74/2025**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் (PW1 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th **day of May 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent Petition u/s.355 BNSS filed and allowed. )***

**எம்.பி.எண்.03/2026மனு** தாக்கல் செய்யப்பட்டு, 17.03.2026**ம்** தேதி மனு அனுமதிக்கப்பட்டு மனுவின் பேரில் **அ.சா. 1** மீண்டும் அழைக்கப்பட்டு **எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவத்தன்று நான் எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்தேன் என்றால் காலை 07.00 மணிக்கு வந்தேன். நான் வருவதற்கு முன்பே உதவி ஆய்வாளர்,மற்றும் தலைமை காவலர் ரஞ்சித்குமார் ஆகியோர்கள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். ரோல்கால் முடிந்து வடக்கு புதுப்பாளையத்திற்கு காவல்நிலையத்தில் இருந்து கிளம்பி சென்றோம். எவ்வாறு சென்றோம் என்றால் மூவரும் தனித்தனியாக அவரது இருசக்கர வாகனத்தில் சென்றோம். வடக்குபுதுப்பாளையத்திற்கு காலை 07.40 முதல் 07.45 மணிக்குள் சென்றோம். சம்பவ இடத்திற்கு அருகில் விவசாய வேலைகள் நடைபெற்றதா என்றால் அந்த நேரத்தில் யாரும் இல்லை. வடக்கு புதுப்பாளையத்தில் உள்ள வாய்க்கால்கரை மட்டும் தான் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் மேற்படி வாய்க்கால் கரை காலிங்கராயன் வாய்க்கால் கரையா அல்லது கிளை வாய்க்கால் கரையா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரியிடம் இருந்து யாரேனும் மதுபாட்டில்களை வாங்கினார்களா என்றால் இல்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.14 13:50:43 +0530

2. எதிரி வைத்திருந்த மதுபாட்டில்கள் தமிழக அரசின் அரசாணைக்கு உட்பட்டு தான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல, அவர் விற்பனைக்காக வைத்திருந்தார். உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்காக எதிரி மதுபாட்டில்களை விற்பதற்காக வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வைத்து எதிரியிடம் இருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் வாய்க்கால் கரை என்று சொல்லியுள்ளேன். ஒரு நபர் பையுடன் மதுபாட்டில்களை வைத்திருந்தார் என்று கூறியுள்ள நிலையில் மேற்படி பை எந்த பை என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருக்கும் மதுபாட்டில்கள் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக உதவி ஆய்வாளர் போட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.14 13:50:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.